# பவுலும் பர்னபாவும் பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையில் பணிபுரிந்தனர்

பிற கலாச்சார மக்கள் மத்தியில் சபைகளை ஸ்தாபிக்க
தேவன் சில ஊழியர்களை அனுப்புகிறார்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் T4b பாடத்தைப் படிக்கவும்.

## 1. பல கலாச்சார மக்கள் மத்தியில் பணிபுரியும் ஊழியக்காரர்களை அனுப்ப உங்கள் இருதயத்தை ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் ஆயத்தப் படுத்தவும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, நீர் எங்கள் சபைக்கு அப்போஸ்தலர்களைத் தந்துள்ளீர். பிற கலாச்சார மக்களை நேசித்து அவர்கள் மத்தியில் உமக்காக ஊழியம் செய்ய எங்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் போதிப்பீராக."

**பின்னணி:** வேதாகமத்தில் யூதர் அல்லாத மக்கள் புறஜாதியார் என்று அழைக்கப்படுகின்றனர். இயேசுவைப் பற்றிய நற்செய்தியை உலகத்தில் உள்ள புறஜாதி மக்கள் யாவரும் அறிந்து கொள்வார்கள் என்று பழைய புதிய ஏற்பாடுகள் கூறுகின்றன.

பிற மக்களுடைய கலாச்சாரத்தை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றால் என்ன நடக்கக்கூடும் என்பதை அப். 14:8-14 ல் காண்க.



*லிக்கவோனியர்கள் பவுலையும் பர்னபாவையும் கடவுள்கள் என்று எண்ணி அவர்களுக்கு பலிகொடுக்க எத்தனித்தனர்.*

- தேவ வல்லமையைக் காட்ட பவுலும் பர்னபாவும் என்ன செய்தனர்? (14:8-10)
- முடவனை குணப்படுத்தியது யார் என்று லிக்கவோனியர்கள் எண்ணினர்? (11-12)
- பவுலுக்கும் பர்னபாவுக்கும் என்ன செய்ய வேண்டும் என்று மக்கள் விரும்பினர்? (13)
- அவர்களுக்குப் பவுலும், பர்னபாவும் என்ன விளக்கம் கொடுக்க வேண்டியது ஆயிற்று? (14-15).

எல்லா மக்கள் சமுதாயத்திற்கும் (ஜனங்கள், கோத்திரங்கள், கலாச்சாரங்கள்) தேவனுடைய மாறாத நோக்கத்தை **ஆதி 12:14** ல் காண்க. ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் பதில் வருகிறது.

- தேவன் ஆபிரகாமை எங்கு போகச் சொன்னார்? (1)
- அங்கு ஆபிரகாம் என்னவாகப் போகிறான்? (2)

- ஆபிரகாமின் மூலமாக எந்த சமுதாய மக்கள் ஆசீர்வதிக்கப்பட போகின்றனர்? (3)
- தேவ வாக்குத்தத்தம் நிறைவேறும்படி ஆபிரகாம் செய்தது என்ன? (4)

ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேறிற்று என்பதை **கலா. 3:8-14** ல் காண்க.

- வெவ்வேறு கலாச்சாரத்தை சார்ந்த புறஜாதி, மக்களுக்கு தேவன் செய்ய விரும்பியது என்ன? (8)
- தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட புறஜாதியார் செய்ய வேண்டியது என்ன? (9)
- யூத பிரமாணங்களை கடைபிடிக்காமலே தேவ ஆசீர்வாதத்தை மக்கள் பெற்றுக் கொள்ளவதற்காக கிறிஸ்து செய்தது என்ன? (13)
- கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லா ஜனங்களும் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தின் எப்பகுதி (aspect) யை இப்போது நாம் விசுவாசத்தின் மூலம் அடைகிறோம்? (14)

இன்னொரு கலாச்சார மக்களிடையே பணிபுரிபவர்களுக்கு இருக்க வேண்டிய மனநிலை என்ன என்பதை **அப். 10:11-28** ல் காண்க:

- ஒரு தேவ தரிசனத்தின் மூலம் பேதுரு என்ன கேட்டார்? (11-16)
- இன்னொரு கலாச்சார மக்கள் கூட்டத்திடையே பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும் போது நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார்? (18-23).
- இன்னொரு கலாச்சார மக்களிடையே பணியாற்றும் போது நமது மனநிலை எப்படி இருக்க வேண்டும்? (24-27).
- நமது கலாச்சாரம் விரும்பாத கலாச்சார மக்களிடம் நமது மனோபாவம் எப்படி இருக்க வேண்டும்?(28)

கலாச்சார வேறுபாடுகளை எவ்வாறு பல சபைகள் இணைந்து களைந்தன என்பதை **அப். 15:1-31** ல் காண்க.

2. **வரும் வார செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

உங்கள் நகரத்திலும் வட்டாரத்திலும் வசிக்கும் பல கலாச்சார மக்களை **இனம்காணுங்கள்.**

சபைகளாலும் கிறிஸ்தவ ஊழியங்களாலும் மிகவும் புறக்கணிக்கப்பட்ட சமுதாயங்கள் எவை என்று **விவாதியுங்கள்.** இவை உங்கள் கலாச்சாரத்துடன் எவ்விதம் ஒன்றுபடுகின்றன அல்லது வேறுபடுகின்றன?

இந்த கலாச்சார சமுதாயங்களைப் பற்றிய முக்கிய செய்திகளைக் **கண்டறியவும்.**

- இந்த சமுதாயத்தில் இருக்கும் மக்கள் எண்ணிக்கை.
- இவர்களில் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்?
- ஏற்கனவே இருக்கும் சபை அல்லது செயற்குழு எத்தனை?
- உங்கள் ஊழியம் தவிர வேறு எந்த ஊழியங்களும் சபைகளும் உங்கள் ஒத்துழைப்புடன் இந்த சமுதாயத்தில் பணியாற்ற முடியும்?
- இந்த சமுதாயத்தின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் எவ்விதம் உங்கள் கலாச்சாரத்துடன் ஒத்துக்போகின்றன? எவ்வாறு வேறுபடுகின்றன?

**விவாதித்து திட்டமிடுக.**

- உங்கள் சபையின் எந்த ஊழியர்களை இந்தப் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தில் பணிபுரிய அனுப்ப முடியும் (பிற கலாச்சார மக்களிடையே பணிபுரியும் திறமையும் ஆர்வமும் உடையவர்கள்).

- அவர்களை பயிற்றுவிப்பவர் யார்?
- பணியில் அவர்களை எவ்வாறு தாங்குவது? கொரிந்துவில் கூடாரவேலை பார்த்துத் தன்னைத் தாங்கிக் கொண்ட பவுலைப் போல இவர்களில் சிலர் தங்களைத் தாங்களே தாங்கிக் கொள்ள முடியுமா? (அப். 18:1-3).
- உங்கள் சபை எப்போது இவர்களை அனுப்பும்?

பயிற்றுவிப்போரை அனுப்ப **ஏற்பாடு** செய்து பயிற்சியாளருக்கு பவுல்-தீமோத்தேயு பாடத்தையும் கொடுக்கவும்.

## 3. வரும் சபை ஆராதனைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

தற்போதைய தேவைகளுக்கும், உங்கள் சமயத்திற்கும் ஏற்றவைகளை பின்வரும் செயல்பாடுகளில் இருந்து **தேர்ந்து கொள்க.**

நீங்கள் பகுதி 1 ல் படித்தவற்றை **வாசித்து அல்லது நடித்துக்காட்டி** மேலே உள்ள அதே கேள்விகளையும் கேட்கவும்.

- லிஸ்திராவில் பவுலும் பர்னபாவும் பணியாற்றிய போது நிகழ்ந்தது என்ன? (அப். 14:8-14).
- எல்லா ஜனங்களையும் குறித்து தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தது என்ன? (ஆதி. 12:1-4)
- இந்த வாக்குத்தத்தத்தின் காரணமாக நாம் எவ்வாறு பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம்? (கலா. 3:8-14)
- யூதர்கள் வெறுத்த கலாச்சார மக்களைப் பற்றிய பேதுருவின் எண்ணத்தை தேவன் எவ்வாறு மாற்றினார்? (அப். 10:11-28).

இரட்சிப்படைய வேண்டுமென்றால் புறஜாதி மக்கள் யூத கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யூத கிறிஸ்தவர்கள் ஏன் எண்ணினர் என்பதையும், பின்னர் இந்தப் பிரச்சினை எப்படி தீர்க்கப்பட்டது என்பதையும் **அப். 15** லிருந்து விளக்கவும்.

- இந்த மன வேற்றுமை குறித்து விவாதிக்க பல சபைகளின் மூப்பர்கள் அப்போஸ்தலர்களை சந்தித்தனர்.
- யூதரைப் போல் ஆகாமலேயே கொர்நேலியுவின் குழுவினர் எவ்வாறு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர் என்று பேதுரு விளக்கினார் (15:8-9).
- புறஜாதியார்களுக்கு தேவன் எவ்வாறு அற்புதங்களைச் செய்தார் என்று பவுலும் பர்னபாவும் அறிவித்தனர் (12)
- கிறிஸ்தவர்கள் ஆவதற்காகத் தங்கள் பாரம்பரியத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று புறஜாதியாரை வற்புறுத்தக் கூடாது என்று யாக்கோபு முத்தாய்ப்பாய்க் கூறினார்(19).

பிற சமுதாய மக்களிடையே சமீபத்தில் பணியாற்றிய யாராவது தேவன் செய்ததைப் பற்றி **கூறவும்.**

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்ததை வழங்கட்டும். ஏசாயா 53 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும்.

பிற கலாச்சார மக்கள் சமுதாயங்கள் இரட்சிக்கப்படவும், ஊழியர்கள் அவர்களுக்கு நற்செய்தியை எடுத்துச் சொல்லவும் மன்றாட்டு ஜெபங்களை ஏறெடுப்பதற்காக விசுவாசிகள் **சிறு குழுக்களை** அமைக்கும்படி செய்யவும்.

**மனன வசனம்** (சேர்ந்து) 7:9.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net